வு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 8 (22—1—68) திங்கள் ★ வெளியூர்: தை 9 (23—1—68) செவ்வாய் [இதழ்: 183

இரயில் பாதைகளை எடுப்பதற்கு எதிர்ப்பு

மத்திய அமைச்சருக்குத் தென்னிந்திய வணிகக் கழகக்க டிதம்

சென்னை, சன. 22—
தென்னாட்டில் சில இருப்புப் பாதைகளை எடுத்துவிட இந்திய இரயில்வேத் துறை முனைந்திருப்பதற்குத் தென்னிந்திய வணிகக் கழகம் எதிர்ப்புத் தெரிவித்து, மத்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தி எதிர்ப்பு அரசு ஏற்பட்டது ஓர் அரிய வாய்ப்பாகும்

இதனை நீடிக்கச் செய்வதே இலட்சியம் ஈடேற வழி

எல்லா மொழிகட்கும் சமவுரிமை வழங்க அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்

மறைமுக இந்தித் திணிப்பை அறவே கைவிட வேண்டும்

தி. மா. மு. க. கூட்ட முடிவுகள்

திருச்சி, சன. 21—
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைச் செயலாளர்கள், முக்கியத் தோழர்கள் அடங்கிய கூட்டம் இன்று சித்தமணி சின்னையா பிள்ளை சத்திரத்தில் நடைபெற்றது.

தி. மா. மு. க. பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. தலைமை வகித்தார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் 250-பேர் வந்து குழுமியிருந்தனர்.

மாலை 4-30 மணிக்குத் தொடங்கிய கூட்டம் இரவு 9-மணி வரையில் நடந்தது; மொழிப் பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

1. இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போராட்டங்களைத் தமிழகத்தில் முதன் முறையாகத் தொடங்கி—தொடர்ந்து நடத்தி, பல முறை சிறை சென்று கஷ்ட நஷ்டங்களை ஏற்றும், அரும் பெரும் தியாகங்களுக்கு ஆளானதன் பலனாகத் தமிழக மக்களையும், இந்தி பேசாத மாநில மக்களையும் இந்தி எதிர்ப்பு அணியில் திரளச் செய்த பாரம்பரியமும் பொறுப்பும்மிக்க அறிஞர் அண்ணா அவர்களும், தி. மு. கழகமும் இன்று மாநில ஆட்சிப் பொறுப்பில் இருப்பது, 'இந்தி ஆதிக்க ஒழிப்புக்குக் கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய வாய்ப்பு' என்று இம்மாணவர் குழு கருதுகிறது.

(அ) இந்த அரசு தொடர்ந்து நீடிப்பதன்மூலமே நமது இலட்சியம் ஈடேறும் என்று இக்குழு கருதுகிறது.

2. இந்தியை ஒரே ஆட்சிமொழியாக இந்தியப் பேரரசின் அரசியல் சட்டத்தில் விதிமுறை ஏற்படுத்தியதற்கும், அந்த நிலையைப் பிடிவாதமாக அமுலாக்க முனைவதற்கும், டெல்லியில் தொடர்ந்து அமைந்த காங்கிரசு ஆட்சிதான் முழுக் காரணமாக இருந்துள்ளது.

(அ) 1967-ல் தி. மு. கழகம் மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்வரையில் தமிழ்நாட்டில் பதவியில் இருந்த காங்கிரசு அரசு இந்தி ஆதிக்கத்திற்கு உடந்தையாக இருந்ததுடன், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி—அதை எதிர்த்து நின்ற மாணவர்களையும், பொதுமக்களையும் சிறைப்படுத்தியும், சுட்டு வீழ்த்தியும், சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கியும் 'இந்தி படிக்காமல் இந்தியக் குடிமகனாக இருக்கமுடியாது' என்ற தத்துவத்தையும் பரப்பியது.

(ஆ) அண்மையில் ஆட்சிமொழிபற்றிய மசோதாவும்—தீர்மானமும் நாடாளுமன்றத்தில் வந்தநேரத்தில், மக்களவையிலும், மாநிலங்களவையிலும், உள்ள தமிழ்நாடு காங்கிரசு உறுப்பினர்கள் நடந்துகொண்டது—தமிழர்களுக்கு அநீதியையும், சங்கடத்தையும், பளுவையும் சுமத்துவதாக அமைந்தது; அந்தத் தீர்மானங்களையும், திருத்தங்களையும் அவர்கள் முழுமையாக ஆதரிப்பதை மாணவர் உலகு நன்கு அறிந்திருப்பதால், 'இப்படிப்பட்டவர்களால் மாணவர்களின் இலட்சியம் ஈடேருது' என்று இக்குழு கருதுகிறது.

3. மத்திய அரசாங்கம் செய்திடும் இந்தி ஆதிக்க முயற்சிகளுக்கு எதிராக மற்ற மாநிலங்களில்கூட இந்தி எதிர்ப்பு உணர்ச்சி உருவாகி வருவதை, இக்குழு பாராட்டுவதுடன், தமிழகத்தில் அமைந்துள்ள இந்தி எதிர்ப்பு அரசுபோல் மற்ற இந்தி பேசாத மாநிலங்களிலும் இந்தி எதிர்ப்பு அரசுகள் அமைந்திருக்குமானால், மத்திய அரசின் பிடிவாதம் தளர்ந்து மொழிப் பிரச்சினையில் நியாயமான தீர்வு கிடைத்திருக்குமென நம்புவதுடன், அண்டை மாநிலங்களில் வளர்ந்துள்ள இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை ஒழுங்குபடுத்தி வலிவான ஓர் இந்தி எதிர்ப்பு அணியை உருவாக்கக் குழு விரும்புகிறது.

4. இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கிவருகின்ற 14 தேசிய மொழிகளுக்கும் சம உரிமையும் மதிப்பும் வழங்குகிற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று இக்குழு கேட்டுக் கொள்வதுடன், அதற்கான முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறு பல்வேறு அரசியல் கட்சிகளையும் வேண்டுகிறது.

(அ) அரசியல் சட்டத்தில் மேற்கண்ட திருத்தம் நிறைவேற்றப்படுகின்ற வரையில், ஆங்கிலமே தொடர்ந்து இந்தியப் பேரரசின் ஆட்சிமொழியாகவும் இணைப்பு மொழியாகவும் விளங்கிட வழிவகுக்குமாறு மத்திய அரசினரை இக்குழு கேட்டுக்கொள்கிறது.

5. மாநில அரசைப் பொறுத்தவரையில், மாநிலத்திற்குள் இடம் பிடித்துக் கொண்டிருக்கின்ற இந்தியை அகற்றுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறு தமிழக அரசை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

(அ) இதன் அடிப்படையில், இந்தியைக் கட்டாயமாக வைத்திருந்த நிலையைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கியிருப்பினும், மும்மொழித் திட்டம் என்பது இந்திக்கு இடம் தருவதாக இருப்பதால், இந்தி ஆதிக்கத்தை அறவே அகற்ற மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டு — தமிழகத்தைப் பொறுத்தவரையில்—இனிமேல், 'தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டும் போதும்' என்ற அளவில் எல்லாக் கல்வி நிலையங்களிலும் இந்திப் பயிற்சியை அறவே நீக்குமாறு தமிழக அரசை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

(ஆ) மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் முயற்சியில் மத்திய அரசாங்கம், என். சி. சி. பயிற்சியில், இந்தி ஆணைச் சொற்களைப் பயன்படுத்தி வருவதை இக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த முறையை மாற்ற முனையுமாறு தமிழக அரசை இக்குழு கேட்டுக்கொள்கிறது; இந்தி ஆணை முறையை மத்திய அரசு தமிழகத்தில் கைவிட மறுத்தால், இந்தி என். சி. சி. அமைப்பு இங்கு கலைக்கப்பட வேண்டுமென்று தமிழக அரசை இம்மாணவர் குழு கேட்டுக் கொள்கிறது.

(இ) காங்கிரசின் ஆட்சிக் காலத்தில், இந்தி ஆணைச் சொற்களை சில பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்புகளில் பயன்படுத்தும் முறையை நுழைத்து இருப்பதை மாற்றி, தமிழ்ச் சொற்களை மட்டுமே பயன்படுத்துமாறு தமிழக அரசை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

தென்னகத்தில் கட்சியைப் பரப்பப் போகிருர்களாம்!

ஜனசங்கத்தின் வீண் கனவு

புதுடில்லி, சன. 22—
தெற்கு மாநிலங்களில் செல்வாக்குப் பெற ஜனசங்கக் கட்சியின் மேலிடம் தீவிரமாக முயற்சி செய்து வருகிறதாம்! இதன் பொருட்டு விரிவான செயல் திட்டத்தையும் அது வகுத்துள்ளதாம்!

அண்மையில் சனசங்கக் கட்சியின் மாநாடு கேரளத்தில் நடைபெற்றது நினைவு இருக்கலாம். தன் மாநிலங்களில், ஜனசங்கத்தைப் பரப்ப முன்னோடியாகவே ங்கு மாநாடு நடத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அடுத்த மாநாட்டைச் சென்னையில் நடத்துவதன்மூலம், தமிழகத்திலும் ஜனசங்கத்தைப் பிரபலப்படுத்த கட்சியின் மேலிடத் தலைவர்கள் கருதுகின்றனராம்.

பத்துப்பேர்களைக் கொண்ட ஜனசங்கத் தலைவர்களின் குழு ஒன்று ப்ரவரியில் சென்னைக்கு வர நுப்பதாகவும் தமிழகத்தில் ஜனசங்கத்தை வேரூன்றச் செய்வதற்கான வழிவகைகளைக் காண்பதே அதன் நோக்கமாயிருக்குமென்றும் கட்சியின் மேலிடத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுடில்லி, சன. 20—
ஆங்கிலத்துக்கு எதிராகவும், இந்திக்கு ஆதரவாகவும் அரசியல் சூழ்நிலைகள் உள்ள வட இந்திய மாநிலங்களில் குஜராத் மாநிலமும் ஒன்ருகும். ஆனால், வெகு விரைவிலேயே அந்த மாநிலத்திலிருந்து வெளிவரும் ஆங்கிலச் செய்தித் தாள்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துவிடப் போகிறது.

வேளாண்மை உதவியுடன் தொழில் வளர்ப்போம்

சென்னை, சன. 22—
"வேளாண்மைத் துறையை வலிவடையச் செய்வதில் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும்; தளராது உழைத்து அதனை வலிவுடையதாக ஆக்கிவிட்டோமானல், நம் தொழில்களுக்குத் தேவையான மூலதனத்துக்கு எவரிடமும் உதவி நாடி நிற்கத் தேவையில்லை! வேளாண்மை மக்களே உதவிட முன் வருவார்கள்! தொழில் முயற்சிகளில் பங்குதாரர்களாகச் சேர்ந்து ஊக்குவிப்பார்கள்.

"இதற்குத் துணை செய்யும்வகையில், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு வேளாண்மை மக்கள்மீது வரி எதுவும் விதிக்காமல் விட்டு விடவேண்டும்; ஏனெனில், ஒருசில ஆண்டுகளாகத்தான் கிராமப்புறங்களில் விவசாயிகளின் கைகளில் காசு புழங்கத் துவங்கியுள்ளது — பணத்தின் ஓசை கேட்கத் துவங்கியுள்ளது; இந்தச் சேமிப்பை மத்திய அரசும், மாநில அரசும் ஈர்த்துக் கொண்டுவிடாமல் இருந்தால், ஐந்து அல்லது பத்தாண்டுகளில் கிராம மக்களே தொழில்களில் முதலீடு செய்யத் துவங்கிவிடுவர்! இப்படித்தான் மேலை நாடுகளில் விவசாயத்தின் அடிப்படையில் தொழில்கள் வளர்ந்தன!"

—முதலமைச்சர் அண்ணா

(உலகத் தொழில் - வர்த்தகக் கண்காட்சித் திறப்புவிழாவில்)

பி. சி. கோஷ் பதவிக்கும் ஆபத்து

'ஆபத்பாந்தவ'ஞகிருர் உமாயூன் கபீர்!

புதுடில்லி, சன. 20—
"இப்போது அமைந்துள்ள கூட்டணி அமைச்சரவைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், அசுதோஷ் கோஷ் தொடர்ந்து முயற்சி செய்வாரேயானல், நான் பதவியிலிருந்து விலகிவிடுவேன்; தமது முடிவை அவர் மாற்றிக் கொள்ளாவிடில், நான் பதவியிலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை" என்று மேற்கு வங்க முதலமைச்சர் திரு. பி. சி. கோஷ் அறிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் உருவாகியுள்ள குழப்பத்தைத் தீர்க்க உதவும் வகையில் உமாயூன் கபீர் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர். இதன் பொருட்டு கல்கத்தாவுக்கு உடனே வருமாறு அவருக்கு அவசர அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

தற்சமயம் டில்லியில் இருக்கும் கபீர், பி. சி. கோஷ் அமைச்சரவைக்கு ஆதரவாகத் தமது செல்வாக்கைப் பயன்படுத்த கல்கத்தாவுக்குச் செல்ல முடிவு செய்துள்ளாராம்.

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 தை 8 (22—1—68) திங்கள்

மாணவர்களே! சிந்தியுங்கள்!

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சி மொழித் திருத்தச் சட்டமும்--தீர்மானமும், இந்தி பேசாத பகுதி மக்களிடையே பெரியதோர் கொந்தளிப்பை மூட்டிவிட்டிருக்கிறது!

முதற்கண் உருவாக்கப்பட்டிருந்த ஆட்சி மொழித் திருத்த மசோதாவை, நமது முன்னேற்றக் கழகம், 'தற்காலிகமான சமரச ஏற்பாடு' என்ற முறையில் ஏற்றுக்கொள்ள அரைமனத்தோடு இணங்கியது.

இவ்வாறு இணங்கிய நேரத்திலேயே, 'ஆங்கில மொழியும் இணை ஆட்சி மொழியாக நீடித்து இருந்துவரும்' என்ற முன்னாள் தலைமையமைச்சர்களின் வாக்குறுதிக்கு, அரசியல் சட்டத்திலேயே ஏற்பாடு செய்ய வேண்டும்–என்ற தனது முடிந்த முடிவையும் அழுத்தந்திருத்தமாக அறிவித்திருந்தது.

நமது முன்னேற்றக் கழகம் விரும்பியபடியே, ஆட்சி மொழித் திருத்த மசோதாவை, சட்டமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கும்பட்சத்தில், பொதுவாக இந்தி பேசாத தென் மாநிலங்களிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் மாணவர்களிடை இன்று காண்கின்ற பரபரப்பும் ஆத்திரமும் தலைதூக்கியே இருக்காது.

ஆனால், இந்தி வெறியர்களுக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்ட இந்திய அரசு, அம்மசோதாவிலும் திருத்தம் செய்ததுடன், இந்தி பேசாதவர்களுக்குப் பெரும் தீமையையும், இந்திக்காரர்களுக்குப் பெரும் நன்மையையும் செய்திடத்தக்க தீர்மானம் ஒன்றையும் நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டது.

இத்தீர்மானம், இந்தி பேசாதவர்களுக்கு இடர்ப்பாட்டையும் இந்திக்காரர்களுக்கு நன்மையையும் செய்வதாக இருக்கிறது என்ற உண்மையை, ஒளிவுமறைவு இல்லாமல் நாடாளுமன்றத்திலேயே–தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்திலேயே---அத்தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த உள்துறையமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சரின் இவ்வொப்புதல் வாயிலாகத் தாமும், தலைமை அமைச்சரும், மொத்தத்தில் அமைச்சரவையும் இந்தி பேசாத மக்களின் எதிர்கால நலனைச் சிதைக்கவும், அதே நேரத்தில் இந்திக்காரர்களின் எதிர்கால நலனை முறையற்ற முறையிலும் மிகுதியான நிலையிலும் வளப்படுத்தவும், தெளிவாகத் தெரிந்தே செயல்பட்டுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானம், இந்தி பேசாத தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்களின்—தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் எழுப்பப்பட்டிருக்கின்ற பெருஞ்சுவராகும்—போடப்பட்டிருக்கின்ற பெரும் விலங்காகும்.

தமிழக மக்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருந்திடக்கூடிய தீர்மானம், பொதுவாகத் தென்னக மாநிலங்களைச் சேர்ந்த அனைவருக்கும் குறிப்பாகத் தமிழகத்தைச் சேர்ந்த அனைவருக்கும், இந்திய அரசில் பொறுப்பேற்றுள்ள இந்திரா காந்தி அமைச்சரவை விட்டிருக்கின்ற அறைகூவலாகும்.

ஆட்சி மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற மேற்படி தீர்மானத்தை, தங்களுக்கு நேரடியாக விடப்பட்டிருக்கின்ற அறைகூவலாகத் தமிழகத்திலுள்ள அனைவரும் கருதினாலும், அத்தீர்மானத்தை, கழக அரசுக்கு விடப்பட்டிருக்கின்ற அரசியல் அறைகூவலாகவே தமிழக அரசுப் பொறுப்பை ஏற்றுக்கோண்டிருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்களாலும், அவரைத் தலைவராகக் கொண்ட முன்னேற்றக் கழகத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது.

மேற்படி தீர்மானத்தை, தனக்கு விடப்பட்டிருக்கின்ற அரசியல் அறைகூவலாகத் தமிழக அரசு தீர்மானிப்பதைப்போன்றே, தமிழகத்தைச் சேர்ந்த இளமைத் துடிப்புள்ள மாணவர்களும் தீர்மானித்துக்கொண்டிருக்கின்றனர்.

'இந்தி மட்டுமே ஆட்சி மொழி' என்ற காங்கிரசுக் கட்சியின் ஆட்சி மொழிக் கொள்கையை, தான் உருவெடுத்த நாள் தொட்டு இன்றுவரை தீவிரமாக எதிர்த்துவருகின்ற அரசியல் அமைப்பு முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்பதை, தமிழக மாணவர்கள் உணர்ந்தே உள்ளனர்.

முன்னேற்றக் கழகம் துவங்கப்படுவதற்கு முன்னரேகூட, 'கட்டாய இந்தி' என்ற ஏற்பாட்டை அறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிடத்தக்க தோழர்கள் பலரும் கடுமையாக எதிர்த்து, அதற்காக வெஞ்சிறையும் சென்றுள்ளனர் என்பது, இன்றும் மாணவர் அனைவரின் உள்ளங்களிலும் பசுமையாக இருக்கத்தான் செய்கிறது.

எனவே, அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்ட இன்றையத் தமிழக அரசு–ஏற்கனவே இருந்துவந்த காங்கிரசு அரசுபோல்–ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படுவதை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசாக இருந்திடவில்லை.

மாணவர்களைப் போன்றே, மேலே குறிப்பிட்டிருக்கின்ற தீர்மானத்தை, தமிழக அரசு முழுமூச்சாக எதிர்க்கின்றது. அவ்வெதிர்ப்பை, வெளிப்படையாக இந்திய அரசுக்குத் தமிழக அரசு ஏற்கனவே அறிவித்தும் இருக்கிறது.

இதுவுமன்றி, முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள இருபத்தைந்து உறுப்பினர்களும், மேற்படி தீர்மானத்தைத் தீவிரமாக எதிர்த்திருப்பதுடன், தமிழக அரசின் எதிர்ப்பையும் மன்றத்தில் தெள்ளத்தெளிய எடுத்தியம்பியுள்ளனர்.

இதுவுமன்றி, தமிழக மாணவர்களைக் கொதிப்படையச் செய்திருக்கின்ற தீர்மானத்தைக் கண்டித்துச் சட்டப் பேரவையின் ஒருமித்த கருத்தை இந்திய அரசுக்கு இடித்துரைத்திடவும் தமிழக அரசு முனைந்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், தங்களுடன் சார்ந்து—தங்கள் உள்ளத்தின் கொதிப்பைப் பகிர்ந்துகொண்டு—தங்கள் முடிந்த கருத்தை இந்திய அரசுக்குத் திட்டவட்டமாக எடுத்தியம்பக்கூடிய அரசாகத் தமிழக அரசு அமைந்திருககின்றபொழுது, அந்த அரசை நடத்திச் செல்லுகின்ற பொறுப்பை இந்தியை எதிர்ப்பதிலும், தமிழக மக்களின் எதிர்கால நன்மையைப் பாதுகாப்பதையே தம் வாழ்க்கை இலட்சியமாகவும் அரசியல் பணியாகவும் கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற இப்பொழுது, கேடுபயக்கக்கூடிய மேற்படி தீர்மானத்தைக் கைவிடக் கோரி---தாங்கள் தனித்த முறையில் கிளர்ச்சியை மேற்கொள்ளவேண்டியது தேவைதானா—முறைதானா என்பதை, தமிழக மாணவர்கள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

மேற்படி தீர்மானத்தைக் கைவிட்டுவிட வேண்டும் என இந்திய அரசைக் கோருவதைத் தமிழக மாணவர்கள் விரும்புகின்றனர்—தமிழக அரசு விரும்பவில்லை; அதற்கு மாறாக, தீர்மானத்தை ஆதரித்து வரவேற்கிறது—என்ற முரண்பட்ட அவலநிலை இல்லை.

மேற்படி தீர்மானத்தைக் குறித்து மாணவர்கள் கொண்டிருக்கின்ற அதே முடிவைத்தான், இன்றையத் தமிழக அரசும் கொண்டிருக்கிறது.

தீர்மானத்தைக் குறித்து மாணவர்கள் கொண்டுள்ள கருத்திலும் இன்றையத் தமிழக அரசு கொண்டுள்ள கருத்திலும் ஏற்றத்தாழ்வு இல்லை—தர வித்தியாசமில்லை.

மாணவர்கள் நலன்தான் தமிழக அரசின் நலனும்!

உண்மை இதுவாக இருக்கின்றபொழுது—இம்மகத்தான உண்மையைத் தாங்களும் நன்கு உணர்ந்துகொண்டிருக்கின்ற பொழுது, மேற்படி தீர்மானத்தைக் கைவிடக்கோரி, 'கிளர்ச்சியில் ஈடுபடத்தான் வேண்டுமா' என்பதை, தமிழக மாணவர்கள் ஒருமுறைக்குப் பலமுறை திரும்பத் திரும்பச் சிந்திக்க வேண்டும்.

—கா. க.

நாடு காக்கும் நல்லவர் அரங்கம்

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து"

ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்னே திருவள்ளுவர் என்ன அழகான பொது உண்மையை எவ்வளவு நயமாகச் சொல்லியிருக்கிறார் என்பது, சென்னையில்—அறிஞர் அண்ணா நகரில் நடைபெறும் இந்திய உலக வணிகத் தொழில் சந்தையில் அமைந்துள்ள பாதுகாப்புத்துறை அரங்கத்தைப் பார்த்தபோது தெளிவாயிற்று.

கிட்டத்தட்ட 50,000 சதுர அடி பரப்புள்ள இடத்தில் அமைந்துள்ள அந்த அரங்கின் முன்றிலில் இந்தியாவில் செய்யப்பட்ட சிறிய விமானம் ஒன்றை—முழு அளவில்— வைத்திருந்தார்கள்; அதை, 'போர் விமானம்' என்றார்கள்; இதற்கு GNAT என்று பெயரிட்டிருந்தார்கள்.

GNAT என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, 'கொசு அல்லது சின்னஞ்சிறு ஈ' என்று பொருள். 'இதுதான், பாகிஸ்தான் பயன்படுத்திய புதுப் புதுப் போர் விமானங்கள், டாங்கிகளைத் தாக்கித் தகர்த்துப் பொடிப்பொடியாக்கியது' என்று சொல்லக் கேட்கிறபோது, வள்ளுவர்தான் நினைவுக்கு வந்தார்!

அரங்கத்தின் உள்ளே நாட்டின் பாதுகாப்புத் தேவைச்குத் தக்க புதுப் புதுப் போர்க் கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நாட்—புஷ்பக்—கிருஷிக் விமானங்களின் மாதிரிகளை வைத்து அவற்றின் செய்நேர்த்தியை—பயனை விளக்குகிறார்கள்.

இரண்டுபேர் அமர்ந்து செல்லத் தக்க புஷ்பக விமானத்தை, பெங்களூர் இந்துஸ்தான் ஏர்கிராப்ட்ஸ் நிறுவனம் தயாரித்து வைத்திருக்கிறது. வயல்வெளிகள், சாதாரண நாட்டுப்புறங்களில் எங்கும் இறங்கிடத்தக்க எளிய இந்த விமானத்தின் விலை—அதன் பயனோடு ஒப்பிடுகிறபோது—ரொம்பக் குறைவுதான்—ரூ. 37,000!

பெங்களூர். ஆவடி, கிர்க்கி, கமாரியா, ஷாஜகான்பூர், இஷாபூர், காசிபூர், கான்பூர், ஐதராபாத், செகந்தராபாத், டேராடூன், ஜபல்பூர் ஆகிய ஊர்களில் உள்ள போர்க் கருவிகள் தயாரிக்கும் நிலையங்கள் இந்த அரங்கில் பங்கு கொண்டுள்ளன. ஆங்கே செய்யப்படும் ஆற்றல் மிக்க போர்க் கருவிகள் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு வெட்பதட்பச் சூழல்களுக்குத் தக்கவாறு போர் வீரர் அணியும் உடைகள், பனி ஆடைகள், பனி உடைக்கும் கருவிகள், பனிமலையில் தங்குகையில் உணவு முறை, மருத்துவ வசதிகள், மலையேறு கருவிகள் போன்றவற்றைக் காண்கிறபோது, 'எவ்வளவு இடுக்கண்களூடே இந்தப் போர் வீரர்கள் நாட்டைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்பது புலனாகிறது.

'உலர்ந்த பிரியாணி'யை அப்படியே கொதிக்கும் நீரில் எட்டு நிமிடம் வேகவைத்தால் நல்ல சுவையும் மணமும் மிக்க பிரியாணி தயாராகிவிடுகிறது!

ஓராட்டுவரை கெடாமல் இருக்கக் கூடிய சப்பாத்தி, ரொட்டி இறைச்சி போன்றவற்றைச் செய்தியாளர்கள் கொஞ்சம் கொஞ்சம் சுவைத்துப் பார்த்து மனந்திறந்து பாராட்டினார்கள்.

சென்னை—கேரளப் பகுதியின் கமாண்டர் பிரிகேடியர் பண்டாலையும், பாதுகாப்பு அரங்கின் பொறுப்பதிகாரியான காப்டன் ஆர். கே. பட்டாராவும் முனைந்து நின்று விளக்கந்தந்த இந்த அரங்கில், 'இமயப் பனிமலை உச்சியில் போர் மறவர் வாழ்க்கை'யைச் சித்திரிக்கும் பகுதி, மக்கள் மனத்தை ஈர்க்கக்கூடியது.

கடல் மட்டத்திலிருந்து 15,000—18,000 அடி உயரம்! சுற்றிலும் எங்கு பார்த்தாலும் வெள்ளை வெளேரென்ற வெள்ளிப் பாளங்களாய்ப் பனிமலை! 48 °F-க்குக் குறைந்த குளிர் நிலை! ஒரே பனி வாடை! அங்கே—மலையை வெட்டி பாடிவீடு அமைத்து இந்தப் போர் வீரர்கள் எல்லை காக்கும் பான்மைக்குத் தலை வணங்க வேண்டும்—சுவையாகச் சித்திரித்திருக்கிறார்கள்!

"1948-க்கு முன்னே இந்த நவீன வசதிகள் இல்லாமல் போர் வீரர்கள், குளிர் தாங்கமாட்டாமல் குருவிகளைப்போல் மாண்டார்கள்" என்றார் விளக்கியவர்.

வெப்பம் மிக்க தமிழகத்தின் பாண்டி நாட்டில் இருந்து காஞ்சிபுரம் வந்து, அங்கிருந்து 'செண்டு' என்னும் கருவி கொண்டு சென்று, இதே இமயத்திலேதான் கரிகாற் பெருவளத்தான்—நவீன வசதிகள் இல்லாத காலத்தில் தன் இலச்சினையைப் பொறித்தான் என்று கூறும் காஞ்சிபுரத்துக் கல்வெட்டு என் நினைவுக்கு வந்தது!

பனிமலையின் அமைப்பை—சூழலை—வாழ்க்கை முறையை அறிந்தபோது, கரிகாலன் பேராண்மையை வியந்து தலை வணங்கியவாறு வெளியேறினேன்!

மக்கள் சிந்தனைக்கு விருந்து வைக்கும் அரங்கம் இது!

—முத்து

உலகப்புகழ்

ஈட்டும்

பத்தமடைப் பாய்

பண்டுதொட்டுக் காத்துவரு தமிழகக் கலைத் திறன்

சென்னை, சன. 19

தமிழ்நாட்டுப் பாய்களின் த னிகரற்ற அழகும், நேர்த்தியு அவற்றுக்கு உலகச் சந்தையி உயரிடம் பெற்றுத் தந்திருக்கி றன.

பாய் முடைதல் பன்னெடு காலமாகவே இந்தியக் கைவி தொழில்களில் ஒரு முன்னோடி விளங்குகிறது; அத்தொழி தென்னகமெங்கிலும்—வடக் சில பகுதிகளிலும் பரவிக் கிட கிறது; இருப்பினும், தமிழகத்தி திருநெல்வேலி மாவட்டம், அம்ப சமுத்திரம் வட்டத்திலுள்ள பத் மடை என்னும் சிற்றூர்தா அவை அனைத்திலும் புகழ்பெற்று விளங்குகிறது; அப்பகுதியில் முடையப்படும் பாய்கள், 'பத்த மடைப் பாய்கள்' என்று வழங்க படுகின்றன.

பத்தமடையில் வாழும் முஸ்லி கள் வழிவழியாகப் பாய் முடையு கலையைக் கைக்கொண்டுவருகி றனர். அவர்களால் முடைய படும் பாய்கள் தனிச் சிறப்பு யனவாக விளங்குகின்றன; ஏெ னில், அவை சித்திரக்கோலங்கள் லும், வண்ண அமைப்பிலும், வடி விலும் தனிச் சிறப்பு வாய்ந்தவை யாக விளங்குகின்றன.

நாட்டில் ஆண்டுதோறும் ஏறத் தாழ ரூ. 2-இலட்சம் மதிப்புள்ள பாய்கள் முடையப்படுகின்றன இதில் பத்தமடையின் பங்கு ரூ. 6 ஆயிரமாகும்.

பத்தமடையில் கிடைக்கும் கோரை, மிக நேர்த்தியானதாக இருப்பதுடன், மருந்துச் சத்து மிகுந்தது என்றும் கூறப்படுகிறது; ஏனெனில், அது பிணியகற்றும் தாமிரபரணி ஆற்றின் கரைகளில் வளர்கிறது என்று கூறுகின்றனர். இப்பாய்கள், மனித உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன என் பது ஆராய்வில் தெரியவந்திருக் கிறது.

பத்தமடைப் பாய்கள் படுக் வும், அமரவும், வழிபாட்டி போது இருக்கவும், மேசை விரிக்கவும், பாய்கள் இருக் களில் போடவும் பயன்பட றன.

பத்தமடையில் முடையப் பாய்களில் பெரும் பகுதி உட்டே அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியா விடுகின்றன. பாய்களின் மொத் ஏற்றுமதி மதிப்பு 1965—66-ஆம் ஆண்டில் ரூ. 2,25,000 ஆக விருந்து, 1966—67-ஆம் ஆண்டில் (1967 சனவரிவரை) ரூ. 1,34,00 ஆகியது.

எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 4 (18—1—68) வியாழன் ★ வெளியூர்: தை 5 (19—1—68) வெள்ளி [இதழ்: 180

கிளர்ச்சி வேண்டாம்— கூடிப் பேசுங்கள்!

தமிழக மாணவர்களுக்கு வி. வி. கிரி வேண்டுகோள்

கோவை, சன. 18—

"நான் அரசியல் சட்டப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைக் குடியரசுத் தலைவர்; எனவே, நான் அரசியல் சட்டப்படிச் செய்யக்கூடியவற்றை யெல்லாம் செய்வேன்"

என்று, மொழிப் பிரச்சினை தொடர்பாகத் தம்மைச் சந்தித்த மாணவர்களிடம் துணைக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி கூறினர்.

தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் சார்பில் திரு. வி. வி. கிரியிடம், மாணவர் இராமசாமி ஓர் மனுவைக் கொடுத்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் திரு. கிரி மேலும் கூறியதாவது:—

"மொழிப் பிரச்சினையை நட்பு முறையிலேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறேன்; இதில் நேரடி நடவடிக்கை எதையும் மேற்கொண்டால், அதுவே, தீர்வுக்கு முட்டுக்கட்டையாகிவிடக் கூடும்.

"இப்பிரச்சினையில் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றுகக் கூடிப் பேசி ஓர் உடன்பாடு காணவேண்டும்.

"நாட்டின் ஒருமைப்பாட்டில் மாணவர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது; வடநாட்டு மாணவர்களும்—தென்னாட்டு [illegible] வர்களும் ஒன்றுகக் கூடிப் [illegible] புதிய சட்டத்தால் எழுந்துள்ள இடர்ப்பாடுகளைப்பற்றி [illegible] தித்து முடிவு காணவேண்டும்."

புதியசட்டத்திற்கு முதற்பலி

மிசோ தேசிய முன்னணி தடை செய்யப்பட்டது!

இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு வழி திறந்துவிடப்படுகிறது!

புதுடில்லி, சன. 17—

'சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்' என்ற பெயரில், அண்மையில், மத்திய அரசு நிறைவேற்றிய சட்டத்திற்கு முதற்பலியாக, மிஜோ மலைவாசிகளின் இயக்கம் தடை செய்யப்பட்டிருக்கிறது!

மிஜோ தேசிய முன்னணிக் கட்சி, 'சட்ட விரோத அமைப்பு' என இன்று மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் அறிவிப்புச் செய்தது.

இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளின்கீழ் இரண்டாண்டுக்கு முன் இந்த இயக்கத்தை மத்திய அரசு தடை செய்திருந்தது; இந்தியப் பாதுகாப்புச் சட்டம் விரைவில் நீக்கப்படவிருப்பதால், இப்போது புதிய சட்டத்தின்கீழ், இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

மிஜோ தேசிய முன்னணி தனி நாடு கோரும் தனது கொள்கையை வெளிப்படையாக அறிவித்துள்ளது என்றும், இந்த இலட்சியத்தைப் பெற ஒரு படையையும் திரட்டிவைத்துள்ளது என்றும் உள்துறை அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.

அசாம் மாநில அரசின் கோரிக்கைக்கு இணங்கவே இத்தடையுத்தரவை டில்லி பிறப்பித்துள்ளது.

மிஜோ மலை மாவட்ட ஆட்சிக் குழுவில் ஆளுங்கட்சியாக உள்ள மிஜோ யூனியன், அடுத்து நடைபெறவிருக்கும் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களில் கலந்துகொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறது.

மிஜோ மாவட்டத்தில் செல்வாக்குப் பெற முயன்று தோல்வி கண்ட காங்கிரசுக் கட்சிக்கு இது ஒரு நல்வாய்ப்பாக அமைந்துவிட்டது. அந்த இரண்டு தொகுதிகளிலும் இரண்டே சுயேச்சை வேட்பாளர்கள்தாம் காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட இருக்கின்றனர்.

1964-ல் மூன்று சட்டமன்ற இடங்களுக்கு நடந்த இடைத் தேர்தல்களில் இரண்டு இடங்களை மிஜோ தேசிய முன்னணி கைப்பற்றியது; இப்போது அது சட்டபூர்வமாகத் தேர்தலில் கலந்துகொள்ளாமல் தடை செய்யப்பட்டுவிட்டது.

பள்ளிகள்—கல்லூரிகள் திறக்கப்படும் செய்தி

அமைச்சர் மறுப்பு

சென்னை, சன. 18—

"நிலைமைகளைக் கூர்ந்து கவனித்து வருகிறோம்; நிலைமை சீர்ப்பட்ட பிறகுதான் கல்லூரிகளும், பள்ளிகளும் திறக்கப்படும் தேதி அறிவிக்கப்படும்; இதற்கிடையில் வந்த செய்தி தவறானதாகும்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், 'சனவரி 29-ம் நாள், கல்லூரிகள்—பள்ளிகள் திறக்கப்படும்' என்று வெளிவந்த செய்தியை மறுத்துக் கூறுகையில் விளக்கினர்.

'ஆட்சிமொழிச் சட்டம் பற்றி மறுபரிசீலனை அவசியம்'

'அனைத்துக் கட்சி—தலைவர்கள் மாநாடு விரைவில் கூடி தீர்வுகாண வேண்டும்'

மக்களவைத் தலைவர் வலியுறுத்தல்

விசாகப்பட்டினம், சன. 17—

"நாட்டின் ஒற்றுமையையே சீர்குலைத்துவிடும் நிலையிலுள்ள ஆட்சிமொழிச் சட்டம் பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும்; அனைத்து அரசியல் கட்சிகள்—தலைவர்களின் மாநாடு ஒன்றை விரைவில் கூட்டி, கொந்தளிப்பு நிலையிலுள்ள பிரச்சினை பற்றி விவாதித்து, ஒரு தேசியப் பொதுக் கருத்தைக் காணவேண்டும்"

என்று, நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

விசாகை மாவட்ட பரிஷத் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில், அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"மொழிச் சட்டத்தை நிறைவேற்றிய நாடாளுமன்றம் தான், அனைத்து நலவுரிமைகளுக்கும் நிறைவு ஏற்படுவதற்கு அதில் உரிய மாறுதல்கள் செய்வது பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

"'மக்களவைத் தலைவர்' என்ற முறையில் பாரபட்சமின்றி நடந்துகொள்வதற்கு நான் கடமைப்பட்டிருந்தாலும், மொழிப் பிரச்சினையில், எனக்கென்று ஒரு தனிக் கருத்து கிடையாது என்பதாகி விடாது!"

'எத்தகைய தியாகத்தையும் செய்து தாய்மொழி காப்போம்'

'இந்தி எதிர்ப்புப் பிரச்சினையை அரசிடமே விட்டுவிடுங்கள்'

மாணவர்களுக்கு அமைச்சர் முத்துசாமி வேண்டுகோள்

மதுரை, சன. 18—

"தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் காக்க, எத்தகைய தியாகத்தையும் செய்யத் தமிழக முதலமைச்சரும், ஏனைய அமைச்சர்களும் ஆயத்தமாக இருக்கிருர்கள்; உயிரைக் கொடுத்தேனும் நமது மொழியை—இனத்தைக் காக்க நாங்கள் இருக்கிறோம்; எனவே, மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தமிழக அரசிடம் விட்டுவிடுமாறு தமிழக மாணவச் சமூகத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

"தற்போது இந்தித் திணிப்புக்கு எதிராக எழுந்துள்ள போராட்டம், கட்சிக் கண்ணோட்டமற்றது—எனினும், நியாயமானதாகும்; எனவே, எல்லாக், கட்சியினரும் கட்சிகளை மறந்து—இதில் ஒன்றுபட்டு நின்று, அரசுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்"

என்று, தமிழக உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி, கோரிப்பாளையத்தில் வைகையாற்றுப் பாலத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

இராமகிருஷ்ணு மாணவர்கள் வேண்டுகோள்

கோவை இராமகிருஷ்ணு கல்வி நிலைய மாணவர்கள், சனவரி 13-ம் நாள் பெரியநாயக்கன்பாளையத்தில் கூடி, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளைக் கைவிட்டு தமிழ்நாடு முழுமையிலும் உள்ள மாணவர்களை வகுப்புகளுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டனர்.

கிளர்ச்சி நீடித்தால் வன்முறைச் செயல்களுக்கு இடமேற்பட்டுவிடும் என்றும், மாணவர்கள் தங்கள் கருத்தை ஏற்கனவே வெளிப்படுத்திவிட்டனர் என்றும், இனி மொழிப் பிரச்சினையில் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு அரசியல் தலைவர்களையும், தமிழக அரசையுமே சாரும் என்றும் அவர்கள் கருத்தறிவித்துள்ளனர்.

'இந்தி எதிப்புக் கிளர்ச்சி வேண்டாம்'

'பொறுப்பை தமிழக அரசிடம் ஒப்படைப்போம்'

கோவை மாவட்ட மாணவர்கள் முடிவு

கோவை, சன. 17—

கோவை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கூட்டம் இங்கு, விருதை பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது; மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தி.மு.க. சார்புடைய மாணவப் பிரதிநிதிகள் 300 பேர் கலந்துகொண்டனர்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை உடனடியாக நிறுத்திக்கொண்டு மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தமிழக அரசிடமே விட்டுவிடுவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது; 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டாம்' என எல்லா மாணவர்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டது.

உடனடியாகக் கல்வி நிலையங்களைத் திறக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிளர்ச்சியை நீடிக்குமாறு சமூக விரோதிகளும், சுயநலச் சக்திகளும் மாணவர்களைத் தூண்டுவதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

காரமடையருகில் ஒரு பேருந்து வண்டியை நிறுத்த முயன்றபோது இரு மாணவர்கள் மோதுண்டு இறந்தமைக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து, மேல் நடவடிக்கைகளை முடிவு செய்ய தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு முடிவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியைக் கவிழ்க்கக் காங்கிரசின் சதி!

'கட்சிகளை மறந்து மொழிச் சிக்கலைத் தீர்க்க ஒத்துழைப்பீர்'

அரசியல்வாதிகட்கு அமைச்சர் செ. மாதவன் வேண்டுகோள்

சோழவந்தான், சன. 18—

"மொழிப் பிரச்சினையில், காங்கிரசுக் கட்சி, மாணவர்களைத் தூண்டிவிட்டு தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்கப் பார்க்கிறது; இந்த நச்சு எண்ணத்தைக் கைவிட்டு, எல்லா அரசியல் கட்சிகளும் கட்சி வேற்றுமைகளை மறந்து, தி. மு. கழக ஆட்சியுடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"ஒருபோதும் இந்தியைத் தமிழகத்தில் திணிக்க அனுமதிக்க மாட்டோம்; எனவே, மாணவர்கள் மொழிப் பிரச்சினையை தி. மு. கழக ஆட்சியிடம் விட்டுவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்"

என்று, சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், இங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

முந்திய அரசு செய்ய மறுத்ததை இன்றைய அரசு செய்யும்

மாநகராட்சி கடன் எழுப்ப அரசு அனுமதிக்கும்

'திட்டங்களை நிறைவேற்ற வணிகரின் உதவியையும் நாடலாம்'-- பேரங்காடி அடிக்கல் நாட்டு விழாவில் அண்ணு அரிய யோசனை

சென்னை, ஜன. 13—

"முன்பு ஒரு முறை பண்டித நேரு சென்னைக்கு வந்திருந்தபோது சென்னை மாநகராட்சியினர், தங்கள் திட்டங்களை நிறைவேற்றப் பணமில்லை என்று சொன்னதற்கு, 'பொதுமக்களிடம் கடன் எழுப்புங்கள்' என்று கூறிவிட்டுச் சென்ருர்; ஆனல், அப்போதிருந்த மாநில அரசு, மாநகராட்சி கடன் எழுப்புவதை ஒப்புக்கொள்ளவில்லை--அதற்கான அனுமதியை வழங்கவில்லை; இப்போது மாநகராட்சி, முக்கியமான தனது திட்டங்களுக்குக் கடன் எழுப்ப முன்வருமானல், அதற்குரிய அனுமதியை வழங்க நாங்கள் சித்தமாயிருக்கிருேம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், மாநகராட்சிப் பேரங்காடி ஒன்றுக்கு அடிக்கல் மாட்டுவித்துப் பேசுகையில் அறிவித்தார்கள்.

சென்னை 92-வது வட்டம் கோடம்பாக்கம் ஆற்காட்டுச் சாலையில் இந்த அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் திரு. நீலநாராயணன் முன்னிலையிலும் [illegible]டைபெற்ற இந்த விழாவில், முன்[illegible] மேயர் சிட்டிபாபு எம்.பி., [illegible] மேயர் பவளவண்ணன் [illegible]கியோரும் கலந்துகொண்டு [illegible]ரையாற்றினர்.

வட்ட மாநகராட்சி உறுப்பினரும், வட்டக் குழுத் தலைவருமான திரு. சா. கணேசன், அனைவரை வரவேற்றுப் பேசினர்.

ஆணையர் திரு. அம்பாசங்கர், இறுதியில் நன்றி தெரிவித்துப் பேசினர்.

அண்ணு அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :—

"பொதுமக்களிடையே கடன் எழுப்பலாம் என்று பொதுவாகக் கூறினலும், எல்லாத் திட்டங்களிலும் முதலீடு செய்ய மக்கள் அவ்வளவாக அக்கறை காட்டமாட்டார்கள்.

இப்படிப்பட்ட பேரங்காடி போன்ற திட்டங்களுக்கு, நல்ல வரவேற்பு இருக்கும்; போட்ட பணம் பெருகும்; வருவாய் நல்ல முறையில் கிடைக்கும் என்பதால், வணிகப் பெருமக்களே அதிக அளவில் கடன் பத்திரங்கள் வாங்கிக்கொள்ள முன்வருவார்கள்.

எனவே, இப்படிப்பட்ட காரியங்களுக்குக் கடன் பத்திரங்களை வெளியிட மாநகராட்சி மேயரும், ஆணையரும் முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

மேலும், இந்தப் பேரங்காடியைக் கட்ட முதலில் ஓர் இலட்ச ரூபாய் அளவில்தான் செலவாகும் என்ருலும், முழு அளவில் கட்டி முடிக்கும்போது மொத்தம் நான்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறது; இந்த அளவுக்கு இங்கே ஒரு பேரங்காடி கட்டப்படுவது பொருத்தமும், தேவையுமான செலவாகும். இதற்காக முயற்சி எடுத்துக்கொண்ட நண்பர் சா. கணேசனைப் பாராட்டுகிறேன்.

சென்னை நகரின் மக்கட் தொகை, விரைந்து பெருகிவருகிறது. மக்கட் தொகைப் பெருக்கத்துக்கேற்ப மக்களின் தேவையும் பெருகுகிறது; அதற்கேற்ற வகையில் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டிய பொறுப்பு மாநகராட்சியைச் சாரும். அந்த வகையிலே இந்தப் பேரங்காடி நல்ல முறையில் பயன்படும் என்று நம்புகிறேன்.

இந்தப் பேரங்காடியைக் கட்ட ரூ. 5 இலட்சம்வரை அரசாங்கத்திடம் கடன் கேட்டு வாங்கிக் கட்டி முடிக்கக் காலதாமதமும் ஆகும்; கடன் கொடுப்பதில் அரசாங்கத்துக்கும் சங்கடம் ஏற்படுகிறது; எனவே, இதற்கு ஒரு மாற்று யோசனையை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரங்காடியின் அடித்தளக் கட்டிடத்தை மட்டும் மாநகராட்சியினர் கட்டிவிட்டு, அதற்கு மேலே இரண்டாம்—மூன்ரும் அடுக்குக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு, இந்த வட்டாரத்தைச் சேர்ந்த வணிகர்களை அணுகலாம்; அவர்களுக்குத் தேவையான இடத்தை ஒதுக்கித் தந்து, அதிலே அவர்களே கட்டிடத்தைக் கட்டிக் கொள்ளச் செய்தால், பிறகு, அதற்குச் செலவான பணத்தை வாடகையில் கழித்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதால் மாநகராட்சிக்கும் சுமை குறையும்; வணிகர்களுக்கும் வசதி கிட்டும்!

நான் சொல்லும் இந்த யோசனை, சட்ட நுணுக்கங்களுக்கெல்லாம் உட்பட்டிருக்குமானல், மாநகராட்சி அதிகாரிகள் ஆராய்ந்து பார்த்து ஆவன செய்யலாம்.

மக்கட் தொகை கூடக்கூட, அடி நிலத்திற்குத் தேவையும், முக்கியத்துவமும் அதிகரிக்கிறது. ஏற்படும் இடப் பற்ருக்குறையைச் சமாளிக்கக் கட்டிடங்களை மேலே உயர்த்திக்கொண்டு போகவேண்டும். சென்னையிலே ஐந்தாறு அடுக்கு மாளிகைகள் அதிகமாக இல்லை; ஆனல் பம்பாயில் ஏழு—எட்டு அடுக்கு மாளிகைகளெல்லாம் மிகச் சாதாரணமாகக் கருதப்படுகிற அளவுக்கு நிறைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு கட்டிடம் யாருடையது என்று விசாரித்தால், ஒருவருக்கு மட்டுமே சொந்தமானதாக அது இருக்காது; பத்துப் பதினைந்து பேருக்குச் சொந்தமானதாக இருக்கும்; அடி நிலம் ஒருவருக்குச் சொந்தமாகவும், அதிலே கட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு அடுக்கும் ஒவ்வொருவருக்குச் சொந்தமானதாகவும் இருக்கும்; இப்படி அங்கே நிலைமையைச் சமாளிக்கிருர்கள். நாமும் அதைப்போல் செய்தால் கட்டிடங்களும் விரைந்து பெருகும்; நிதிப் பற்ருக்குறையும் நீங்கும்.

சென்னையில் இப்படிப்பட்ட பேரங்காடிகள் பல, பல்வேறு இடங்களிலேயும் தோன்றவேண்டும்; ஏனெனில், தற்போது நகரின் ஒரே மொத்த விலைப் பேரங்காடியான கொத்தவால்சாவடி, நகரின் மையத்தில்—மிக நெரிசலான இடத்தில் இருப்பதால், எல்லோரும் அங்கேதான் போய்வரவேண்டியிருக்கிறது; மேலும், கொத்தவால்சாவடியில் வேலை செய்து பிழைப்பவர்களும் அதன் அருகிலேயே வசிக்கவேண்டியிருக்கிறது. கொத்தவால்சாவடிக்கு அருகில் நடைபாதைகளில் வசிக்கும் மக்களிடம், 'கோடம்பாக்கத்திலே வீடு கட்டித் தருகிருேம்; அங்கே குடியிருங்கள்' என்று சொன்னல், 'எங்களுக்கு வீடு வேண்டாம்; இங்கேயே இருக்கிருேம்' என்றுதான் கூறுகிருர்கள்; ஏனெனில், கோடம்பாக்கத்தில் குடியிருந்துகொண்டு கொத்தவால் சாவடிக்குக் கோழி கூவுவதற்கு முன் எழுந்து போனல்தான், அன்றையப் பிழைப்பு நடக்கும்! கொஞ்சம் காலதாமதமாகப் போக நேரிட்டால், வேலை கிடைக்காது! எனவேதான், கூலி வேலை செய்து பிழைப்பவர்கள், அங்கேயே வசதியற்ற சூழ்நிலையிலும் வசிக்க வேண்டியிருக்கிறது!

கொத்தவால்சாவடியைப் பல பிரிவுகளாகப் பிரித்து நகரின் பல்வேறு பகுதிகளிலும் வைத்தால் நெரிசல் குறையும்; கூலி வேலை செய்து பிழைப்பவர்களுக்கும் வசதியாக வாழ்க்கை நடத்த வாய்ப்பு ஏற்படும்.

இப்படிப்பட்ட பேரங்காடிகளை ஆங்காங்கே நிறுவ மாநகராட்சி முன்வர வேண்டும்; அதற்கான நிதி வசதியைத்தேட, ஆங்காங்கேயுள்ள வணிகப் பெருமக்களை நாடினல், நிச்சயம் அவர்களும் இதில் முதலிட முன்வருவார்கள்.

கொத்தவால்சாவடியில் ஏற்பட்டுவரும் நெரிசலைத் தவிர்க்கவும் அதை வசதியுள்ளதாக மாற்றியமைக்கவும் என்னென்ன காரியங்களைச் செய்யலாம் என்று கண்டறிய, முன்பிருந்த காங்கிரசு ஆட்சியில் ஒரு குழு அமைக்கப்பட்டது: அந்தக் குழுவும் ஆராய்ந்து அறிக்கை ஒன்றைக் கொடுத்தது; ஆனல் அந்த அறிக்கை—எத்தனையோ அறிக்கைகள் படிப்பதற்கு மட்டுமே பயன்பட்டதைப்போல்—படிப்பதற்குத்தான் பயன்பட்டிருக்கிறது; அதனைச் செயல்படுத்த முனைய அரசு முனையவில்லை. அந்த அறிக்கையை நானும் படித்துப் பார்த்தேன்; நல்ல யோசனைகள் அதில் உள்ளன."

இந்தியைத் திணிக்க விதிமுறைகள்

அரசுப் பணிமனைகளுக்கு டெல்லி சுற்றறிக்கை

புதுடில்லி, சன. 18—

மத்திய அரசாங்கப் பணிமனைகளிலும், அமைச்சகங்களிலும், ஆட்சி மொழிச் சட்டத்திற்கேற்ப இந்தி—ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் பயன்படுத்துவதற்கான விதிமுறைகளைக் கடைபிடிக்குமாறு மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பவிருக்கிறது. நடைமுறையில் ஏற்படும் நிலைமைக்கேற்ப இந்த விதிமுறைகளில் மாறுதல்கள் செய்யப்படும்.

மத்தியிலிருந்து இந்தி பேசாத மாநிலங்களுக்கு அனுப்பப்படும் உத்தரவுகள் மற்றும் கடிதங்கள் இந்தியில் எழுதப்பட்டபோதிலும், அவற்ருேடுகூட ஆங்கில மொழி பெயர்ப்பும் அனுப்பிவைக்கப்படும்; இந்த மொழிபெயர்ப்பு காரணமாக அரசாங்கப் பணிமனைகளின் வேலைகளில் பல திருத்தங்கள் செய்யவேண்டிவரும்.

கடிதத் தொடர்புக்கான விதிமுறைகள், இந்தி பேசும் மாநிலங்களுக்கு ஒருவிதமாகவும், இந்தி பேசாத மாநிலங்களுக்கு வேறுவிதமாகவும் கடைபிடிக்கப்படவேண்டியிருக்கும்.

சென்னபுரி அன்னதான சமாஜத்தின் அரும்பணிகள்

அண்ணுவின் பாராட்டுரையும் அரசு உதவிக்கான உறுதிமொழியும்

சென்னை, சன. 16—

"சென்னபுரி அன்னதான சமாஜத்திற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்கவும், அதன் அறப் பணிகளை விரிவுபடுத்தவும் அரசு உதவி கிடைக்கும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் உறுதிமொழியளித்தார்கள்.

அண்ணமலைபுரத்தில் உள்ள மேற்படி சமாஜத்தின் அனதைகள் இல்லத்தில் நடந்த பொங்கல் விழாவுக்குத் தலைமைவகித்து அண்ணு அவர்கள் பேசுகையில் இந்த உறுதிமொழியை வழங்கி மேலும் பேசுகையில், 'எந்த மதத்தினரானலும்—மத மற்றவர்களானலும்—அவர்கட்கு எவ்விதப் பாகுபாடும் காட்டாமல், மனித உணர்வு அடிப்படையில் சமாஜம் சிறந்த முறையில் உயர்ந்த பணியினைப் புரிந்து வருகிறது' என்று கூறினர்.

இந்த சமாஜத்தை மத்திய அரசு அங்கீகரித்து நிதியுதவியளிக்க முன்வந்திருப்பது பற்றி அண்ணு அவர்கள் குறிப்பிடுகையில், 'மத்திய அரசு சில நேரங்களில் ஏதேனும் நல்ல காரியத்தையும் செய்கிறது' என்று சிரிப்பொலிக்கிடையே கூறினர்.

"மத்திய அரசு இதனை அங்கீகரித்ததில் வியப்படைய ஒன்றுமில்லை; ஏனெனில், நாட்டிலேயே மிகச் சிறந்த முறையிலும், இதைப் போன்ற மற்ற நிறுவனங்களும் இதனைப் பின்பற்றக்கூடிய நிலையிலும் இது இயங்கிவருகிறது" என்றும் அண்ணு அவர்கள் குறிப்பிட்டு மேலும் கூறியதாவது :—

"'அன்னதான சமாஜம்' என்ற பெயரில் இந்த நிறுவனம் இயங்குவதால், ஒரு கவளச் சோற்றுக்கு சத்திரத்து வாயிலிலே மக்கள் கூடி நிற்பது போன்ற காட்சிதான் என் நினைவிலே இருந்துவந்தது; ஆனல் நான் இங்கு வந்தடைந்தபோது (மூன்று 'இலட்ச ரூபாய்ச் செலவிலே அமைக்கப்பட்டிருக்கும்) இந்த அழகான மாளிகையையும், இதிலே உள்ள பரந்த எழிற்கூடத்தையும், நூலகத்தையும், படிப்பகத்தையும் தூய்மையான தோற்றத்தையும் கண்டு என் நினைப்பை மாற்றிக் கொண்டேன்.

இந்த நிறுவனத்தின் தலைவர் திரு. பி. வெங்கட்ரமண ராவும் மற்ற நிர்வாகிகளும் மிகுந்த அக்கறை காட்டி பாடுபடுவது பாராட்டுக்குரியதாகும்; இந்த முதிய வயதில் அவர் இந்த நிறுவனத்துக்காகச் சுறுசுறுப்புடன் உழைத்து வருவது, என்போன்ற வயதினருக்கெல்லாம் ஓர் அறைகூவலாகும்."

அண்ணு அவர்களை வரவேற்றுப் பேசிய திரு. வெங்கட்ரமண ராவ், இந்த நிறுவனம் 100 ஏழை மாணவர்கட்கு உணவளிப்பதுடன், நகரில் ஆறு உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கட்கும் மதிய உணவு அளிக்கப்படுவதாகவும், தலைமை நிறுவனம் 150 மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் அளித்துவருவதாகவும், கிளை நிறுவனம் 60 மாணவர்கட்கு இந்த வசதியை அளித்துவருவதாகவும் தெரிவித்தார்.

"பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இந்த அறநிறுவனத்துக்கு வசதிபடைத்தவர்களும், அரசினரும் தாராளமாக உதவவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

10 ஆண்டுவிலை உயர்வை 2 ஆண்டில் கண்டது இந்தியா!

தேசிய வருமானமும் குறைந்து மக்கள் மேலும் ஏழையாயினர்!

விலையேற்றத்துக்கு, உணவுப் பொருட்களின் விலைகளே முக்கியக் காரணமாக இருக்கின்றன என்பதை உணர்ந்தால், வருகிற மாதங்களில் விலை நிலவரம் எப்படி இருக்கும் என்பதை எளிதில் யூகிக்கலாம்.

விலைகள் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளன என்பதற்கு ஓர் உதாரணம் கூறலாம்; கடந்த இரு ஆண்டுகளில் உணவுத் தானியங்களின் விலைகள் மட்டும் 48 சதவிகிதம் உயர்ந்துள்ளன; எனவே, தவிர்க்கமுடியாத வகையில் அக்காலக் கட்டத்தில் மொத்த விலைகள் 34.4 சதவிகிதம் உயர்ந்தன. கடந்த 2 ஆண்டுகளில் ஏற்பட்ட விலை உயர்வானது, அதற்கு முந்திய 10 ஆண்டுகளில் ஏற்பட்ட உயர்வைக் காட்டிலும் அதிகமாகும்.

"பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியாவைப் போன்று வேறு எந்த நாடும் இந்த அளவுக்கு உள்நாட்டு நிதி வளங்களைத் திரட்டியதில்லை" என்று நிதியமைச்சர் பெருமைப்பட்டுக் கொண்டார்; ஆனல் தேசாய், ரூபாய்க்கணக்கில் அவ்விதம் கூறினர் என்ருல் அது சரியே. நாடு பெரியது என்பதால் சிறு முயற்சி மூலம் திரட்டப்படும் தொகையும் பெரிய தொகையாக உள்ளது. ஆனல் திரட்டப்பட்ட நிதி வளம், நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் எவ்வளவு பங்கு என்று கணக்கிட்டால் அவருடைய கூற்று நிலைக்காது!

இந்தியாவின் தேசிய வருமானம் அதிகரிப்பதற்குப் பதில் முன்னிருந்ததைவிட 3.2 சதவிகிதம் குறைந்துள்ளது; அதாவது, மக்கள் முன்னிருந்ததைவிட ஏழைகளாகிவிட்டனர்! இது, நமது பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் நோக்கத்துக்கு நேர்மாருன நிலையாகும்!

தமிழர்கள் யாருக்கும் தாழ்ந்தவர்கள் அல்லர்!

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிட ஆயத்தமாவீர்!

பொங்கல் விழாவில் அமைச்சர் கருணநிதி உரை

சென்னை, ஜன. 16—

"தமிழ் மொழி, உலகில் வேறு எந்த மொழிக்கும் தாழ்ந்ததல்ல; தமிழ் மக்கள்மீது ஆதிக்கம் செலுத்த வேறு எவரையும் அனுமதிக்கமாட்டோம்"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி பொங்கல் திருநாள் விழாவொன்றில் பேசுகையில் குறிப்பிட்ட[illegible]

சென்னை—கொன்னூர் நெடுஞ்சாலையில் உள்ள 'பிஞ்சிராப்போல்' என்ற நிறுவனத்தில நடைபெற்ற பொங்கல் விழாவுக்கு அமைச்சர் தலைமை தாங்கினர்.

"இந்தியையும் – ஆங்கிலத்தையும் சேர்த்து 'பிஞ்சிராப்போல்' என்ற பெயரிட்டிருப்பது பொருத்தமற்றதாகும்" என்று குறிப்பிட்டு, 'அனதை விலங்குகளின் அன்பு நிலையம்' என்ற பெயரை இட[illegible] என்று யோசனை கூறினர்.

அவர் மேலும் பேசுகையி[illegible] குறிப்பிட்டதாவது :—

"தமிழ் மக்கள், தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இன்றுள்ள நிலையிலேயே திருப்தி

(3-ம் பக்கம் பார்க்க)

தமிழும்- மலையாளமும் தாயும் மகளும்போல்!

வள்ளுவரும் கம்பரும் எங்களுக்கும் சொந்தம்!

உலகத் தமிழ் மாநாடு பற்றிக் கேரள நாளிதழ்

சென்னையில் நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடு குறித்து, மலையாள மொழி நாளிதழான 'மாத்ரு பூமி'யில், 'தமிழ் மகா சம்மேளனம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருப்பதாவது :—

"தமிழ் மொழியையும் தமிழ்ப் பேசும் மக்களையும் மட்டுமல்ல—நம்மைப் பொறுத்துங்கூட மிக முக்கியமானதோர் பெருவிழா சென்னையில் நடைபெற்றிருக்கிறது. அது, ஓர் அனைத்துலக மாநாடும், விவாத அரங்குமாகும். தமிழ் மொழிபற்றியும், பண்பாடுபற்றியும் பலதரப்பட்ட ஆராய்ச்சிகள் அங்கு நடைபெற்றன; ஒரு பெரிய கண்காட்சியும் துவங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ச் சான்றோர்களின் சிலைகள், சென்னைக் கடற்கரையில் தலைநிமிர்ந்து நிற்கின்றன! திருவள்ளுவரும், கால்டுவெலும், ஔவையாரும், வ. உ. சிதம்பரனும், கம்பரும், சுப்பிரமணிய பாரதியும், ஏனையோரும், தமிழ் மக்களின் மொழிப் பற்று—நாட்டுப் பற்று ஆகியவைகளின் சின்னங்களாகச் சிலை உருவில் காட்சியளிக்கின்றனர்!

அது மட்டுமன்று; சிலைகளில் ஒன்று சிலப்பதிகாரத்தின் கதாநாயகி கண்ணகியினுடையதாகும். மலையாளிகளான நமக்கும் இது பெருமை தரும் நிகழ்ச்சியல்லவா? நிச்சயமாகப் பெருமைதான்; மலையாள மொழிக்கும்—தமிழ் மொழிக்கும் உள்ள தொடர்பு, தாயும் மகளும் போன்றதானாலும் சரி—தமக்கை—தங்கை போன்றதானாலும் சரி—இந்த இரண்டு மொழிகளும் 'இவ்விரு மாநிலங்களின் மக்களும் ஒன்ருக நிற்கின்றனர்—ஒற்றுமையாக வாழ்கின்றனர்' என்ற உண்மையை, அனைவரும் ஒத்துக்கொள்வர்.

தமிழ் மொழியின் பழைமையையும் அதன் பலதரப்பட்ட வளர்ச்சியையும், மாநாட்டைத் துவக்கிவைத்த ஜாகிர் உசேன் எடுத்துரைத்தார்.

இயற்கையாகவே தமிழுக்குத் தனித்து நிற்கும் வலிமை இருந்தும், தமிழ் மக்களின் அறிவுப் பசி, அவர்களைச் சமஸ்கிருத மொழியுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தச் செய்துவிட்டது.

குடியரசுத் தலைவர் சொன்னபடி, தமிழின் பரந்த மனத்தை அனைவரும் நினைவுகூருவது நல்லதாகும்.

ஔவையும், கம்பரும், திருவள்ளுவரும், தமிழருக்கு மட்டும் சொந்தமானவர்களல்லர்! குறுகி நிற்பதற்கல்ல—பரந்து வளருவதற்குத்தான் அவர்கள் ஆவல் கொண்டிருந்தனர்!

வ. உ. சிதம்பரம் பிள்ளை கப்பல் ஓட்டியது, தமிழ்நாட்டிற்காக மட்டுமல்ல—இந்தியா முழுவதற்குமான நன்மையைக் கருதியே அவர் கப்பலோட்டினர்.

அதுபோலத்தான் பாரதியார் பாடியதும், இமயம்வரை பரந்து கிடக்கும் இந்தியாவைப்பற்றி—அதன் பெருமையைப்பற்றி—அதன் சுதந்தரத்தைப்பற்றித்தான்! மொழியின்பேராலும், எல்லையின்பேராலும் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், அந்தப் பெருமக்களின் இலட்சியத்தை நாம் மறக்காமல் இருப்போமாக!

கண்காட்சியைத் திறந்துவைத்த இராஜாஜி அவர்கள், 'கடந்துபோன காலத்தையல்ல—எதிர்காலத்தைத்தான் நாம் உற்றுநோக்கவேண்டும்' எனக் குறிப்பிட்டதற்கும் இதே பொருள்தான் இருக்கவேண்டும்.

மலையாளிகளான நமக்கு, இப்பெரு விழாவில் குறிப்பான பெருமை உண்டு; மலையாளமும் தமிழும் நடைமுறையில் ஒன்றுதான். சிலப்பதிகாரம், சேர நாட்டு இளவரசர் ஒருவரின் படைப்பாகும்!

'தமிழா அல்லது மலையாளமா' என்று முடிவு செய்யப்படாத நூல்களும சில இருக்கின்றன.

நமது செங்குட்டுவனையும், குலசேகரப் பெருமாளையும், தமிழ் மக்கள் உரிமை கொண்டாடுவதுபோல், 'திருவள்ளுவரும், கம்பரும் நம்முடையவர்களே' என்று நாமும் உரிமை கொண்டாடலாம்! நற்செயலுக்கும், நற்பண்புக்கும், நற்சிந்தனைகளுக்கும் எல்லைதான் இல்லையே!"

சென்னை 33-வது வட்ட எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்

மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம், தோழர் ஆ. தன்சிங் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்டவாறு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர்: தேங்காய் சீனிவாசன்; துணைத் தலைவர்: ஆ. தன்சிங்; செயலாளர்: பொ. மு. சாமி; துணைச்செயலாளர்: டி. எம். சீனிவாசன்; பொருளாளர்: ஐ. அபிசேகரன்; துணைப் பொருளாளர்: எ. கண்ணன்; மன்றக் காப்பாளர்: சி. வி. ஆடலழகன்; செயற்குழு உறுப்பினர்கள்: கே. கண்ணன், த. கணேசன், ஆ. கோவிந்தசாமி, அ. செல்வராசன், பெ. வேலு, எஸ். இராமலிங்கம், ப. கிருட்டினமூர்த்தி, பே. முத்து, இரா. தட்சணாமூர்த்தி, பா. வேணு, ஐ. கண்ணன், ச. கணேசன்.

ஆத்துப்பட்டி எம்.ஜி.ஆர். மன்றம்

திண்டுக்கல் வட்டம்—ஆத்துப்பட்டி எம்.ஜி.ஆர். மன்ற அமைப்புக் கூட்டம், தோழர் பெ. அகரமுத்து தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—அவைத் தலைவர் : பெ. அகரமுத்து; செயலாளர் : ஏ. பி. சுப்பிரமணியன்; துணைச் செயலாளர் : கே. பி. காளிமுத்து; பொருளாளர் : ஆர். பெருமாள்; செயற்குழு உறுப்பினர்கள் : எஸ். தம்பித்துரை, எஸ். நடராசன், கே. இராமசாமி, யு. மருதமுத்து, கே. மருதை, பி. முத்துச்சாமி, ஏ. ஆண்டியப்பன்.

இந்தி எதிர்ப்புக்குறித்து டெல்லியின் கவனம்

அண்ணாமீது முழு நம்பிக்கை கொண்டிருக்கிறாராம் சவான்

புதுடில்லி, சன. 18—தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளை மத்திய அரசும், உள்துறை அமைச்சகமும் தீவிரமாகக் கவனித்து வருகின்றனவாம்.

இந்தி எதிர்ப்பு ஆரவாரங்கள் குறித்து மத்திய அரசு, தமிழக அரசுக்கு இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை; இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் உருவாகிவரும் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் வளர்ச்சியையும், அவற்றைத் தமிழக அரசு எப்படிச் சமாளிக்கிறது என்றும் மத்திய அரசு கவனிக்கத் தவறவில்லையாம்.

1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திய மாணவர் குழு, தமிழக முதலமைச்சர் அண்ணாவும், மற்ற அமைச்சர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும், தமிழ்நாடெங்கும் சில மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திவருவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு அண்ணாவுக்குத் திறமை உண்டு என்பதில் சவான் நம்பிக்கையுடன் இருந்துவருகிருர் என்று கூறப்படுகிறது.

துரிஞ்சாபுரம் ஒன்றிப்புக்கு அமைச்சர் மதியழகன் வருகை

பள்ளிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா---இயந்திரக் கலப்பையை இயக்கிவைத்தார்

22—12—67 அன்று துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் தேவனும்பட்டு ஊராட்சியில் தாழ்த்தப்பட்டோர் நலத் துறைப் பள்ளிக்கு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பி. எம். பெல்லியப்பா ஐ.ஏ.எஸ். தலைமையில்—உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அடிக்கல் நாட்டினர்.

துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் உயர் துவக்கப் பள்ளிக்குக் கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். முருகையன் தலைமையில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அடிக்கல் நாட்டினர்.

இரண்டு நிகழ்ச்சிகளிலும் ஒன்றியத் தலைவர் ஏ. நடேசக் கவுண்டர், துணைத் தலைவர் பெ. சு. திருவேங்கடம், மாவட்டத் தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அதிகாரி கு. சண்முகம், கோட்டாட்சித் தலைவர் எஸ். நாராயணன் பி.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரிய கிளாம்பாடி ஊராட்சி சிறு கிளாம்பாடி கிராமத்தில் ஒன்றியத்தில் புதிதாக வாங்கிய இயந்திரக் கலப்பையை திரு. எஸ். முருகையன் எம்.எல்.ஏ. தலைமையில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் இயக்கிவைத்து, டிராக்டரில் அமர்ந்து நிலத்தை உழுது இயக்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பி. எம். பெல்லியப்பா, மாவட்ட வேளாண்மை அதிகாரி கு. அ. சண்முகவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஒன்றியத் துணைத் தலைவரும் ஊராட்சிமன்றத் தலைவருமான பெ. சு. திருவேங்கடம் அனைவரையும் வரவேற்று அமைச்சருக்கு வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.

பெருந் தலைவர் ஏ. நடேசக் கவுண்டர் நன்றி நவின்ருர்.

உணர்வோர் உள்ளம்

தமிழ் பொது மொழியாகும் நாள் வரட்டும்

"இந்தியாவை ஒரே நாடாக உருவாக்க உதவும் அத்தனைத் தன்மைகளும் இங்கே இருக்கின்றன; இருந்தாலும், இந்தியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய—அவர்கள் தத்தம் தாய்மொழியுடன் பயன்படுத்தக்கூடிய—ஒரு பொது மொழி இல்லை; நாம், நம்முடைய உழைப்பின் மூலமும் நல்லெண்ணத்தின் மூலமும் ஓர் இந்தியப் பொது மொழியை வளர்ப்போம்"

என்று அரை நூற்ருண்டுக் காலத்திற்கு முன்பாக, காந்தியார் கண்ட கனவின் விளைவே 'இந்தி இயக்கம்'!

காந்தியார் கண்ட ஒவ்வொரு கனவையும் அவரது சீடர்களே அழித்தொழித்தனர்! இந்த அரை நூற்ருண்டுக் காலத்தில்—எத்தனையோ புயல்களுக்கிடையேயும், தமிழகத்தில் இந்தி தீபம் எரிந்து கொண்டிருந்தது என்ருல், அதற்குக் காந்தியாரின் தன்னலமற்ற நல்லெண்ணமே காரணமாகும்; இன்று அந்தத் தீபம் அணைந்துவிட்டது; இது குறித்து, காந்தியார் உயிருடன் இருந்திருந்தாலும் வருந்தியிருக்கமாட்டார்.

சாவதற்கு முன்பு அவ[illegible] சீடர்களின் போக்கை உணர்ந்து கொண்டிருந்தா[illegible] எனவேதான், இறப்பதற்குமு[illegible] 'காங்கிரசைக் கலைத்துவிடுங்க[illegible]' என்று அறிவுரை தந்துவிட்[illegible] மறைந்தார்!

காங்கிரசுதான் இந்தி—இந்[illegible]தான் காங்கிரசு; எனவே, காங்கிரசுக்கு அவர் தந்த அறிவுரை, இந்தி சபைகளுக்குப் பொருந்தும்; அவர்கள், தன்னலம் காரணமாகச் செய்ய மறுத்ததை, மக்களும் மாணவர்களும் இன்று செய்[illegible] வைத்துவிட்டார்கள்.

இந்தியர்கள் அனைவரும், [illegible] தாய் மொழியுடன் தமி[illegible] பொது மொழியாகக் கற்கும் நா[illegible] விரைவில் வரட்டும்!

தேசியக் கவியும்—புரட்சிக்[illegible]ஞரும்—கவிமணியும்—நாம[illegible]லாரும் கண்ட கனவுகளை இ[illegible] அனைவரும் அறிந்து [illegible] நாள் விரைவில் வரட்டும்!

காந்தியார் இந்தி இயக்[illegible] நடத்துவதற்காகத் தமிழ[illegible]ருந்து சிலரை வடநாட்டிற்[illegible] வரவழைத்து, அவர்களுக்கு இந்தி கற்பிக்க ஏற்பாடுகள் செய்தார்; தமிழன்பர்கள், தாமாக நாடெங்கிலும் சென்று தமிழியக்கத்தை நடத்துவார்களாக!

ஜி. சீனிவாசன்
பெங்களூர்.

கரூர் 3-வது வட்டத்தில் கழகப் பொதுக்கூட்டம்

25—12—67 இரவு 7-மணியளவில் கரூர் 3-வது வட்டம் சின்னசாமி மன்றச் சார்பில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்திற்குத் தோழர் கந்தசாமி தலைமை தாங்கினர்; தோழர்கள் சுப. இராசகோபால், உமாகாந்தன், பெரியார் உணவு விடுதி எஸ். நல்லசாமி, பரமத்தி சண்முகம், நகரச்செயலாளர் என். ஆர். இராமசாமி, ஜீவா கலைமணி ஆகியோர், டெல்லி ஆட்சியினர் மொழிப் பிரச்சினையில் தமிழகத்துக்கு இழைத்துவரும் அநீதியைக் கண்டித்தும், தமிழக அரசின் சாதனைகள் குறித்தும் விளக்கிப் பேசினர்.

கூட்டத்தில், கரூர் நகராட்சிமன்றக் கூட்டம் 14—12—67-ல் நடைபெற்றபோது 1909-ம் ஆண்டிலிருந்து 'நகராட்சி உயர்நிலைப் பள்ளி' என்றிருந்ததை, 'சேர்மன் இரத்தினம் உயர்நிலைப் பள்ளி' என்று மாற்றியிருப்பதைக் கண்டித்தும்—திரும்பப்பெற வலியுறுத்தியும், தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டாமெனத் தமிழக அரசினரை வேண்டிக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 81-வது வட்ட கலைஞர் கருணாநிதி மன்றம்

இலட்சிய நடிகரின் 'அண்ணா இலலத்'தில்—வட்டச் செயலாளரின் தலைமையில்—எஸ். எஸ். ஆர்., நடிகமணி டி. வி. என். ஆகியோரின் முன்னிலையில் கலைஞர் கருணாநிதி மன்றம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம் :—

தலைவர் : இரங்கநாதன்; செயலாளர் : இராசன்; துணைச்செயலாளர் : ஆர். கே. ஆலை; பொருளாளர் : மாணிக்கம்; செயற்குழு உறுப்பினர்கள் 13-பேர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு இருந்துவிடக் கூடாது.

"வளத்தையும் ஒளிமிக்க வாழ்வையும் எடுத்துக்காட்டுவதாகும் இந்தப் பொங்கல் நன்னாள்; ஆனால், இந்த இரண்டையும் பெற்றிடப் பெரிய போராட்டமே நடத்த வேண்டியுள்ளது.

"தமிழ் மக்கள் தங்களுடைய எதிர்கால நல்வாழ்வுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யக் காத்திருக்க வேண்டும்."

சென்னை -- கொருக்குப்பேட்டை அண்ணா நகர் குடிசை வாழ்வோர் சங்கம்

மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் 14—1—68-ல் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம் :—தலைவர் : கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.; துணைத் தலைவர் : ஜி. சீத்தாராமன்; அவைத் தலைவா : ஏ. துரை; செயலாளர் : எம். கே. பட்டாபி; துணைச்செயலாளர் : கே. எம். சண்முகசுந்தரம் : பொருளாளர் : என். கண்ணன்; துணைப் பொருளாளர் : மா. ந. கோவிந்தசாமி; மற்றும் 13-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பார் முழுதும் ஏர் முனையிலே!

நகைச்சுவை நம்பி—ந. மா. முத்துக்கூத்தன் குழுவினர் நிகழ்த்தும் அரிய கொள்கை விளக்கக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க :—

கவிஞர் ந. மா. முத்துக்கூத்தன்,
7, தாமோதர் தெரு,
சென்னை-6.

திருவெண்ணெய்நல்லூரில் அமைச்சர் ஏ. கோவிந்த[illegible]

பேரூராட்சி மன்றத்தின் வரவே[illegible]

திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சிமன்றச் சார்பில் டிச. 22-ல் வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

மன்றத் தலைவர் திரு. கே. அப்பாசாமி தலைமையில், மன்ற உறுப்பினர் தி. கு. சாமிநாதன் வரவேற்புரை வாசித்தளித்தார்.

அமைச்சர் நன்றி கூறிப் பேசுகையில் வட்டாரத்தில் உள்ள குறைகளை விரைவில் களைவதாகக் கூறினர்.

வட்டாரச் சீரணிச் சார்பில் தி. வ. அண்ணாதாசன் வரவேற்புரை வாசித்தளித்தார்; புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ. கோவிந்தராசனும் கலந்துகொண்டார். அ. சே. குமாரசாமி பி.எஸ்.சி. நன்றி பேசினர்.

பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வை[illegible]

13—12—67 அன்று [illegible] கோட்டை கிராமம் ஒன்றி[illegible] ஆரம்பப் பள்ளியின் புதிய [illegible]டத் திறப்பு விழா நடைபெ[illegible] காருவள்ளி ஊராட்சிமன்ற[illegible]வர் ஏ. பெருமாள் தலை[illegible]தார்.

அமைச்சர் ஏ. கோ[illegible] அவர்கள், கட்டிடத்தை[illegible] வைத்து சொற்பொழி[illegible]

ஏ. பெருமாள் [illegible] இரட்டைப் பெண் [illegible]களுக்கு 'கண்ணகி' 'அல்லி' என்றும் அமை[illegible]ரிட்டார்கள்.

சேலம் உருக்காலைக்கு முட்டுக்கட்டை ஏன்?

தலைமையமைச்சருக்கு கிருஷ்ணமூர்த்தி கடிதம்

...டர்புடையவர்கட்கு அனுப்பிவைத்திருப்பதாக இந்திரா பதில்

கடலூர், சன. 14—

"சேலம் உருக்கு ஆலையை நிறுவ இந்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று கோரி, நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி எழுதிய கடிதத்திற்கு, தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி எழுதியுள்ள பதிலில், சேலம் உருக்காலை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களைத் தாமும் கவனித்ததாயும், அவைகளை உருக்கு–இரும்புத்துறை அமைச்சுக்கும், திட்டக் குழுவுக்கும் அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி இந்திரா காந்திக்கு திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது :—

"தஸ்தூர் கம்பெனியார் சேலத்தில் இரும்பு ஆலை அமைப்பது பற்றிய தமது அறிக்கையை வழக்கமான முறைகளையன்றி புதிய முறைப்படி இரும்பு தயாரிக்கும் அடிப்படையில் தயாரித்து இந்திய அரசிடம் கொடுத்திருக்கின்றனர்; துரதிருஷ்டவசமாக இது குழப்பத்திற்குள்ளாகியது.

4 மில்லியன் டன் தயாரிக்கும் இரும்பு ஆலை இயங்கப் போதுமான இரும்புத் தாதுக்கள், நீண்ட காலத்துக்குக் கஞ்சமலைப் பகுதியில் கிடைக்காது என்று கொண்டும், அத்தகைய இரும்பு ...றுவும் செலவினங்கள் ...ட், விசாகப்பட்டினம் ...வைகளைவிட அதிகமாக ...கும் என்று காரணம் ...ட்டியும் இப்பொழுது முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது.

...ந்திய அரசின் உத்தரவுக்கிணங்கத் தமிழக அரசு, சேலம் பகுதியில் இரும்பு வெட்டியெடுக்கவேண்டிய இடத்தில் 24,000 ஏக்கர் நிலம் உரிமை செய்ய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளனர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ...நகலில் ஐந்தாவது இரும்பு ஆலை ...று ...க் துவக்க வேலைக்கு ரூ. 65 ... ஒதுக்கப்பட்டுள்ளது. ...லும், அரசுத் துறையில் ...ள்ள இரும்பு உற்பத்தியை ... மில்லியன் டன்களிலிருந்து ... மில்லியன் டன்கள்வரை ...ர்த்தவும் திட்டமிடப்பட்டுள் ...து.

இன்றைக்கு இருக்கும் இரும்பு ஆலைகளின் உற்பத்தித் திறனை உயர்த்துவதைவிட, சேலம், ஆஸ்பெட், விசாகப்பட்டினம் ஒவ்வொன்றிலும் ஒரு சிறு இரும்பு ஆலை நிறுவுவதால் தென்னகத்து மக்களின் விருப்பமும் நிறைவேறும்.

சேலத்து இரும்பாலை நிறுவுவதே வேறு அடிப்படையில் இருக்கிறது; ஏனெனில், சேலம் தாதுவால் தனிப்பட்ட கலப்பட எஃகுத் தயாரிப்பதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 80 கோடி இறக்குமதி பணம் மிச்சமாகும்.

சேலம் இரும்பாலை நிறுவ மொத்தம் ரூ. 120 கோடிதான் செலவாகும்; அதிலும் அந்நியச் செலாவணி ரூ. 46 கோடிதான் தேவைப்படும்.

அதுவுமின்றி, இந்தக் கலப்பு இரும்பை நான்காண்டுகளில் உற்பத்தி செய்யத் தொடங்குமெனத் தெரிகிறது.

சேலம் இரும்பாலை நிறுவுவது, தமிழக மக்களின் நீண்டநாளைய உள்ளக்கிடக்கையையும் நிறைவு செய்யும்."

ஏ...ற்றுமதி பற்றிய கருத்தரங்கு

மு...தலமைச்சர் அண்ணா ...தலைமையில் துவக்க விழா

சென்னை, சன. 18—

ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காகக் கருத்தரங்கு ஒன்று சென்னையில், சன. 19-ம் நாள் இராஜாஜி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா, துவக்க விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

இந்தியா முழுவதிலுமுள்ள வர்த்...கத்தினர்—அரசாங்க அதி...ள்—மற்றும் இத்துறையில் ...முள்ள அனைவரின் கவனத்... கவர்ந்துள்ள இந்தக் கருத்...ல் மொத்தம் 700 பிரதிநிதி...பங்கேற்பார்கள்; வெளி...ங்களிலிருந்து மட்டும் 300 பிரதிநிதிகளாக வருகின்ற...

...தரங்கில் நமது ஏற்றுமதித் ...ல பற்றிப் பொதுவான ...ரைகளும், விவாதங்களும் ...பெறும்; ஏற்றுமதியைப் ...குவதற்கான வழிகளும், ...ங்களின் வாயிலாகக் கண் ...படும்.

...மி கலைக் குழுவினர்

...நிகழ்ச்சிகள்

... 18 : சேலம்; 19, 20 : ... 21 : திருவரங்கம்; ...ருச்சி டவுன்; 24, 25 : ...பகுதி; 25 : சங்கிலி ...ம்.

'சோவியத்து லாண்டு' ஆண்டுவிழா

முதலமைச்சர் அண்ணா துவக்கிவைப்பார்

'சோவியத்து லாண்டு' இதழின் இருபதாவது ஆண்டுவிழா, 19—1—68 மாலை 6-மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில், டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் நடைபெறும்; முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விழாவைத் துவக்கிவைத்து, தென் வட்டாரத்திற்கான நேரு நினைவுப் பரிசுகளை வழங்குவார்; சென்னையில் உள்ள சோவியத் தூதுவரான திரு. ஜி. ஐ. காவரின், திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., திரு. அகிலன், திரு. விசுவம், திரு. எம். கல்யாணசுந்தரம், திருமதி கல்யாணி குமாரமங்கலம், திரு. இராமமூர்த்தி, சோவியத் தமிழறிஞர் இப்ராகிமோ ஆகியோர் உரையாற்றுவார்கள்.

அனைத்திந்திய விளையாட்டுப் போட்டிகள் முடிவு

அணிவகுப்பை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பார்வையிட்டார்

சென்னை, சன. 18—

சென்னையில் கடந்த ஐந்து நாட்களாக நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றுவந்த 23-வது இந்தியத் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நேற்று முடிவுற்றன.

எல்லாப் போட்டிகளும் முடிந்தபின், எல்லா மாநில விளையாட்டு வீரர்களும் மைதானத்தின் மையத்தில் கூடினர்.

தங்கள் மாநிலக் கொடிகளுடன் விளையாட்டுக் குழுவினரின் தலைவர்கள் அணிவகுத்து வந்து மேடையை அரை வட்டமாகச் சுற்றி நின்றனர்.

அணிவகுப்பை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பார்வையிட்டார்.

தமிழக மாநில விளையாட்டு சங்கத் தலைவர் இராசரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர். அதற்குப் பதிலளித்தபின், விழா முடிவுற்றதாக அனைத்திந்திய ஒலிம்பிக் விளையாட்டுச் சங்கத் தலைவர் அறிவித்தார்.

இந்திய ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டு, அதை நான்கு வீரர்கள் எடுத்து மடித்து சங்கத் தலைவரிடம் அளித்தனர்.

அதன்பின், எல்லா விளையாட்டு வீரர்களும் அரங்கைச் சுற்றி மகிழ்ச்சியுடன் சென்று முழக்கமிட்டனர்.

வடக்கிலிருந்து வந்த வாடையின் விளைவு!

சென்னையில் கடும் குளிர்

சென்னை, சன. 17—

"சென்னை நகரில் கடந்த இரு நாட்களாகக் காணப்படும் கடும் குளிர்க் காற்று, இந்தியத் தீபகற்பத்தின் வடபகுதியில் எழுந்த குளிர் வாடையின் விளைவேயாகும்; வடக்கிலிருந்து இக்காற்று இங்கு வந்திருக்கிறது; இன்னும் இரு நாட்களுக்கு இரவு நேரக் குளிர் நிலை மாறாது"

என்று மீனம்பாக்கம் வானிலை அறிவிப்புத்துறை வானிலையாளர் கூறியுள்ளார்.

கழக இடைத் தேர்தல்

சென்னை 78-வது வட்ட தி.மு.க. கிளையின் நிர்வாகிகள் இடைத் தேர்தல் 20—1—68 இரவு 8-மணிக்கு, சைவ முத்தையா முதலி 5-வது தெரு, 3-எண்ணுள்ள சிவகுமார் இல்லத்தில் தோழர் மு. அயாத் பாட்சாவை ஆணையாளராகக் கொண்டு நடைபெறும்; செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன்" என்று ஆயிரம்விளக்குப் பகுதி தி. மு. க. செயலாளர் சி. சிட்டிபாபு அறிவிக்கிறார்.

தி.மா.மு.க. செயலாளர்கள் கூட்டம்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகளின் செயலாளர்கள் கூட்டம் 21-1-68 அன்று திருச்சியில்—குமரி தனிப் பயிற்சிக் கல்லூரியில் (2-ஏ, கோட்டை ஸ்டேஷன் ரோடு, திருச்சி-2) நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்கள் இதையே அழைப்பாகக் கருதி வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டத்தில், தி. மா. மு. கழகத்தின்,

1. ஆக்கப் பணிகள்;
2. ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா—இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி;
3. மாணவர் கழக மாநாடுகள்;

ஆகியவை பற்றி ஆராயப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்புச்செழியன் பி.ஏ., தா. கிருஷ்ணன் எம்.ஏ., மு. தெய்வீகன் பி.ஏ.பி.எல்., மற்றும் எம். எஸ். வெங்கடாசலம் எம்.ஏ.பி.எல். ஆகியோரும் கலந்துகொள்வார்கள்"

என்று, தி. மா. மு. க. பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. அறிவிக்கிறார்.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

19—1—68 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு

திரைப்பட நடிகர் கே. கண்ணன் அவர்கள் தலைமையில் வள்ளுவர் கலையரங்கம் பயிரிட்ட ந. தங்கராசின்

'வாழை' (சமூக நாடகம் நடைபெறும்)

கட்டணம் : ரூ. 2, 1, 50 காசு

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனையைக் காணத் தவறாதீர்

20—1—68 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய—நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி நடிக்கும் 'ஓர் இரவு' நாடகம் நடைபெறும்.

இன்னும் மூன்று நாட்கள் மட்டும் பொருட்காட்சி நடைபெறும்

காணத் தவறாதீர்கள்!

கே. கோவிந்தசாமி, எம்.சி.
அமைப்பாளர்

கோபி நகர

தி.மு.க. கிளை தோழர்களுக்கு :

கோபி நகரத்தின் 1 முதல் 5 வார்டுகள் வரைக்குமாக தனிக் கிளை ஒன்று—'புதுப் பாளையம் கிளை' என்பதன் பெயரால் அமைக்கப்பட்டிருப்பதாகவும், அந்தப் பகுதி சம்பந்தப்பட்ட கழக நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்துக்கும் தம்மிடமே அணுகுமாறு கேட்டுத் தோழர்களுக்கு அறிவித்தும், தோழர் நாச்சிமுத்து என்பவர் நடந்துகொள்வதாக எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோபி நகரத்தின் எல்லா வார்டுகளிலும் உள்ள கிளைகள் நகரக் கிளைக்கு உட்பட்ட உட்கிளைகளே ஆகும். அனைத்தும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கிளையின் அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

எனவே, கோபி நகரின் 1 முதல் 5 வார்டுகள் வரையுள்ள பகுதிக்கான உட்கிளையைத் தனிக் கிளையாகப் பாவித்தோ, நகரக் கழகத்தை மீறி தனியான முடிவினை எடுப்பதற்கு அந்த உட்கிளைக்கு உரிமை இருப்பதாகக் கருதியோ கோபி நகர தி. மு. க. கிளைத் தோழர்கள் செயல்பட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கோபி நகரத்தைப் பொறுத்த வரையில், முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரான தோழர் ஜி. பி. வெங்கிடு அவர்களிடமே கழகச் சம்பந்தப்பட்ட அனைத்துக்கும் தொடர்புகொள்ளுமாறு கோபி நகர கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று கோபி வட்ட தி.மு.க. செயலாளர் பி. ஏ. சாமிநாதன் எம்.பி. அறிவிக்கிறார்.

ஜே. டபுள்யூ. டி. நிறுவன ஊழியர் பேரவைக் கூட்டம்

ஜே. வால்டர் தாம்ப்சன் நிறுவன ஊழியர் யூனியன்களின் அனைத்து இந்தியப் பேரவையின் முதல் ஆண்டுப் பேரவைக் கூட்டம், சனவரி 20, 21 ஆகிய நாட்களில் சென்னை நகரில் நடைபெறும்; பேரவையின் தலைவரான திரு. எச். என். திருவேதி தலைமை வகிப்பார்; அனைத்திந்தியாவிலுமுள்ள ஜே. டபிள்யூ டி. யூனியன்களின் பிரதிநிதிகளும்—பம்பாயிலிருந்து அதிக அளவிலும் இதில் கலந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகத்துக்கு அளிக்கவேண்டிய ஊழியர்களின் கோரிக்கைகளின் விவரங்களும், மற்றும் ஊழியர்கள் நலன் பற்றிய பிரச்சினைகளும் விவாதிக்கப்படும்.

பேரவையின் அடுத்த ஆண்டுக்கான நிர்வாகக் குழுவும் இந்தக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும்.

பாலர் அரங்கம்

சன. 19, 20-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'டார்ஜானும் நியூயார்க் வீரச்செயல்களும்'

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம் :

சிறுவர்களுக்கு : 20 காசு
பெரியவர்களுக்கு : 40 காசு

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

20—1—68

சென்னை 98-வது வட்டம்

கலைஞர் மு. கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு சி.ஐ.டி. நகரில் (வீட்டு வசதி போர்டு எதிரில்); தலைவர் : முனு. லோகநாதன்; பேசுவோர்: அமைச்சர் முத்துசாமி, முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி., துரை முருகன், இரா. சடகோபன், சைதை சம்பந்தம் எம்.சி., வை. பாலசுந்தரம்.

நெய்வேலி-2

கங்கைகொண்டான் காலனி கலைஞர் மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு கலைஞர் திடலில் (செய்தி நிலையம் அருகில்); தலைவர் : இரா. மன்னவன்; பேசுவோர் : பிரம்பையார், ஏ. பி. மனோன்மணி, எஸ். எஸ். நேசன், இரா. கரிகாலன், இரா. சந்திரகாசன், ந. இராசரத்தினம்.

நாகை 11-வது வட்டம்

தி.மு.க. தோழர்கள் சார்பில் மாலை 6 மணிக்கு வ.உ.சி. தெருவில்; தலைவர் : என். பக்கிரிசாமி எம்.சி.; பேசுவோர்: எஸ். தியாகராசன் பி.ஏ.பி.எல்., எஸ். எம். ரெங்கசாமி எம்.சி., பி. மாணிக்கம் எம்.சி., இ. வெள்ளத்துரை. (இரவு 7 மணிக்கு முருகு பாண்டியன் குழுவினரின் 'அண்ணா ஆட்சி' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

பம்பாய்—தாராவி

தி. மு. கழக 18-வது ஆண்டு விழா; மாலை 6 மணிக்கு கணேசர் திடலில்; வரவேற்பாளர் : பி. எஸ். செல்லையா; தலைவர் : எம். எஸ். முத்து; பேசுவோர் கவிஞர் கா. வேழவேந்தன், திருபணி சங்கர், சி. இரவீந்திரன், சு. செழியன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.